செ.வெ.எண், 03-2020 நாள்:04.05.2020

**விழுப்புரம் மற்றும் திண்டிவனம் நகராட்சி பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (04.05.2020) விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட கடை வீதி தெரு, எம்.ஜி.ரோடு மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மற்றும் சமூக இடைவெளி கடைபிடிக்கப்படுகிறதா என்பதனை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட பாதிராப்புலியூர் கிராமத்தில் கொரோனாவல் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக சென்று அப்பகுதியில் கிருமி நாசினி மற்றும் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை பார்வையிட்டு அப்பகுதியில் வசிக்கக் கூடிய பொதுமக்களிடம் ஒலிப்பெருக்கி வாயிலாக தூய்மை நடவடிக்கை மேற்கொள்ளவும், அச்சமின்றி இருக்கவும், உங்கள் பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்கு செல்லாமலிருந்தால் நோய் தொற்று மேலும் பரவாமல் பாதுகாத்து கொள்ள முடியும் என அப்பகுதி வாழும் மக்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வேண்டுகோள்விடுத்தார். நோய் தொற்று பகுதியில் அத்தியாவசியப்பொருட்கள் என்ன வேண்டும் என்பதை தெரிவித்தால் உடனுக்குடன் அப்பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் காவல்துறையினர், வருவாய் துறை மற்றும் ஊரக வட்டார வளர்ச்சித்துறையினர் வாயிலாக உதவிகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார். மேலும், இதனை தொடர்ந்து மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட ரெட்டனை, ஆசூர் மற்றும் திண்டிவனம் பகுதியில் எம்.ஜி.ஆர் நகர் ஆகிய பகுதிகளில் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட கடை வீதி பகுதிகளில் அத்தியாவசியப்பொருட்கள் வாங்க வரும் பொதுமக்கள் கட்டாயமாக முககவசம் அணிய வேண்டும் என்றும், அப்படி முகக்கவசம் அணியாமல் வருபவர்களை அத்தியாவசிய பொருட்கள் வழங்க வேண்டாம் எனவும் சமூக இடைவெளியினை கடைபிடிக்கவும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஒலிப்பெருக்கி வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதனை தொடர்ந்து பெட்ரோல் பங்குகளிலும் முகக்கவசம் அணியாமல் வரும் பொதுமக்களுக்கு பெட்ரோல் மற்றும் டீசல் வழங்க வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், திண்டிவனம் சார் ஆட்சியர் டாக்டர்.எஸ்.அனு.இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.